Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous — **Case No. CC. 73/2025**
Preliminary Register

Deposition of — **PW- 7 LW -7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விஜயகுமார் | Father Name | : | கந்தையன் |
| Village | : | தென்றல் நகர் | Taluk | : | திருவாரூர் |
| Age | : | 65 | Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of May 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை</u>

நான் கடந்த 06.10.2017ம் தேதி காலை 08.00 மணிக்கு வலங்கைமான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 சந்திரா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தண்மைக்கேற்ப நிலையக்குற்ற எண். 221/2017 ச/பி. 294(b), 323, 324 இதச மற்றும் ச/பி.4 TNPWH Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்புகளை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சம்பவம் நடந்தது 05.10.2017 ஆனால் வழக்கு பதிவு செய்யப்பட்ட தினம் 06.10.2017 என்றால் சரிதான். ஒரு நாள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்ததற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள் நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும் அ.சா. 1 கொடுத்த பொய்யான புகார் அடிப்படையில் எதிரிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றாலும் எதிரிக்கு இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.11 14:58:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.